DECEMBER 2022 **U/ID 33218/UCT4C/ UCL5A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டுமே 30 சொற்களில் விடை தருக.

1. பாண்டிய மன்னனின் நாட்டுவளம் குறித்து முத்தொள்ளாயிரம் கூறும் செய்தி யாது?

2. முத்தொள்ளாயிரத்தின் சிறப்பினைக் கூறுக.

3. தமிழில் தோன்றிய முதல் சிற்றிலக்கிய நூல் எது?

4. திருவரங்கக் கலம்பகத்தின் ஆசிரியர் யார்?

5. முதல் பரணி நூல் எது?

6. தமிழின் மைந்தர்கள் யாவர்?

7. சதுக்கம் என்பது என்ன?

8. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழின் ஆசிரியர் யார்?

9. 'சிந்துக்கு தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?

10. இராமனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியவர் யார்?

11. தமிழின் தோழர்கள் யாவர்?

12. சைவ சமய குரவர்களைப் பட்டியலிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டுமே 200 சொற்களில் விடை தருக.

13. முத்தொள்ளாயிரத்தின் பாடற் அமைப்பை விளக்குக.

14. நந்திக் கலம்பகம் கூறும் பாணனின் சிறப்பைக் கூறுக.

15. கலிங்கத்துப் பரணியில் கூறப்படும் பண்பாட்டு உவமைகளைச் சுட்டுக.

16. தமிழ் விடு தூது கூறும் தமிழின் வளர்ப்பு நிலையைச் சுட்டுக.

17. கழுகு மலையின் சிறப்பை விளக்குக.

18. சிந்து இலக்கியம் குறித்து எழுதுக.

19. பிள்ளைத் தமிழின் பெண்பாற் பருவங்களை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிக்கு மட்டுமே 500 சொற்களில் விடை தருக.

20. முத்தொள்ளாயிரம் கூறும் சேர நாட்டின் படைச்சிறப்பை விளக்கிக் கூறுக.

21. வள்ளைப்பாட்டு என்றால் என்ன? அதன் பொருட்சிறப்பை தொகுத்துரைக்க.

22. அண்ணாமலை ரெட்டியார் கூறும் முருகப்பெருமானின் சிறப்புகளை எடுத்துரைக்க.

23. 'புயம்' எனும் கலம்பக உறுப்பு மூலம் நந்திவர்மன் எவ்வாறு புகழப்படுகிறான்? விவரி.

24. தமிழ்விடு தூது கூறும் தமிழ்மொழியின் பெருமைகளைப் புலப்படுத்துக.

———————